| பாடத்திட்டம் | இரண்டாம்மொழி – தமிழ் 200 மணித்தியாலயங்கள் |
|---|---|

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| 1.0 | **கேட்டலும் பேச்சும்**<br>1.1.சொற்கள்இசொற்றொடர் களை முறையாக உச்சரிப்பார் | நாளாந்தம் பயன்படுத்தும் சொற்கள் | சொற்கள் சொற்றொடர்களை ஒலிப்பு முறைக்கேற்ப உச்சரிப்பார். | செய்து காட்டல்.<br>ஒலி உச்சரிப்புமுறை | 03மணித்தி யாலங்கள் |
| | 1.2. சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி உரையாடுவார். | விளக்கம் கூறுதல்<br>வாழ்த்துதல்<br>உபசரித்தல்<br>நன்றி கூறல்<br>வருத்தம் தெரிவித்தல்<br>பாராட்டுதல்<br>நிராகரித்தல்<br>அறிமுகஞ் செய்தல்<br>விடைபெறுதல் | உரையாடலுக்கு அவசியமான சொற்களைப் பயன்படுத்துவார். | வகிபாகமேற்றல்<br>இருமொழிப் பயன்பாடு<br>வினாவுதல் முறை | 04மணித்தி யாலங்கள் |
| | 1.2.1.சொற்களஞ்சிய விருத்தியினூடாக இயல்பாக உரையாடுவார் | குடும்பத்தினரும், உறவினரும், அயலவரும்.<br>வீடும் வளவும் அமைப்பு, அறைகள், உபகரணங்கள்<br>சூழலும் சுற்றுப்புறமும்<br>தோட்டம், பறவைகள்<br>வீட்டுப் பிராணிகள்<br>இயற்கைச்சூழல் ஆறுகள், குளங்கள், கடல், மலை, கிராமம், நகரம், பாடசாலை, அலுவலகங்கள், சந்தை, வைத்தியசாலை, வணக்கத் தலங்கள் | சொற்களஞ்சியத்தை மேம்படுத்தி இயல்பாக உரையாடுவார்.<br><br>கருத்துக்களை இயல்பான மொழியில் முன்வைப்பார். | செய்து காட்டல்<br>கலந்துரையாடல்<br>இருமொழிப்பயன்பாடு. | 02மணித்தி யாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | | **மொழிவளம்**<br>ஒத்து ஒலிக்கும் சொற்கள் (உ ம்) படம், குடம்<br>இருமொழிக்கும் பொதுவான சொற்கள்<br>ஒத்த – எதிர்க்கருத்துச் சொற்கள்<br>ஆண் பால் பெண் பால்<br>பிரதிப் பெயர்கள்<br>ஒருமை, பன்மை<br>நிறங்கள்<br>உடல் உறுப்புக்கள்<br>மரபுப் பெயர்கள்<br>தொடர் மொழிக்கு ஒரு மொழி<br>சுட்டுப் பெயர் (அது,இது,அவை,இவை, அவர்,இவர்,உவர்)<br>வினாச் சொற்கள் - என்ன? ஏன்?எப்படி?<br>…மேல், கீழ், உள்ளே, வெளியே, இடம், வலம், முன், பின், திசைகள்<br>பெயர், வினைச் சொற்கள்<br>அடைமொழிகள் (பெரிய வீடு, உயரமான மலை பச்சை நிறம்)<br>உடன்பாடு, எதிர்மறை (வேண்டும், வேண்டாம் முடியும், முடியாது)<br>பேச்சு வழக்கு – எழுத்து வழக்கு | கருத்துக்களைத்<br>தெளிவாகவும்.<br>சுட்டிப்பாகவும்இ<br>எடுத்துரைப்பார். | செய்துகாட்டல்<br>கலந்துரையாடல்<br>.இருமொழிப்பயன்பாடு | 04மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 1.3.இலகு வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் கூறுவார் | பெயர்ப் பயனிலைகளைக் கொண்ட வாக்கியங்கள்<br>- (உ ம்) - இவர் என் அப்பா.<br>- இது ஒரு பூ.<br>- இலங்கை ஒரு தீவு.<br>வினாச் சொற்கள்<br>- இவர் யார்?<br>- இது என்ன?<br>வினைச் சொற்கள்<br>(உ ம்) அப்பா வருகிறார்.<br>தம்பி விளையாடுகின்றான்.<br>அம்மா சமைக்கிறார்.<br><br>குறிப்பிட்ட விடயம் தொடர்பாகப் பேசுதல்<br>சுய அறிமுகம், எனது வீடு, எனது குடும்பம், எனது ஊர், எனது நாடு | இலகுவான வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் கூறுவார்.<br><br>ஏதாவது விடயம் பற்றிப் பேசுவார் | செய்து காட்டல்.<br>ஒலி உச்சரிப்பு முறை<br>போலச் செய்தல்<br>வகிபாகமேற்றல்<br>இருமொழிப் பயன்பாடு<br><br>செய்து காட்டல்<br>முன் வைத்தல் | 04மணித்தியாலங்கள்<br><br>04மணித்தியாலங்கள் |
| | 1.4 இலக்கண வழுவின்றி வாக்கியங்களை அமைத்துப் பேசுவார் | இருதிணை, ஐம்பால், மூவிடம், ஒருமை, பன்மை, முக்காலம் | இலக்கண வழுவற்ற வாக்கியங்களை அமைத்து இயல்பாக உரையாடுவார் | செய்து காட்டல்.<br>கலந்துரையாடல் | 04மணித்தியாலங்கள் |
| | 1.5. குறிப்பிட்ட விடயம் தொடர்பான கலந்துரையாடல்களிற் பங்கேற்றுத் தமது கருத்துக்களை முன்வைப்பார். | சிறு கலந்துரையாடல்கள், கூட்டங்கள்,‘ஆம்’ என்று முடியும் சொற்கள் (உ-ம் : கூறுவாராம், வருவாராம் போன்ற சொற் பாவனை.) | பொருத்தமான விடயம் தொடர்பாக உரையாடுவார்<br><br>பொருத்தமான முடிக்கும் சொற்களைப் பயன்படுத்தி உரையாடுவார்.<br><br>கலந்துரையாடல்களிலும் கூட்டங்களிலும் தம்கருத்துக்களைப் பொருத்தமான முறையில் வெளிப்படுத்துவார். | செய்துகாட்டல்<br>முன்வைத்தல் | 04மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 1.6. காட்சிப்படுத்தப்பட்ட படங்களைப் பார்த்துத் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவார். | பல்வேறு காட்சிகளைக் கொண்ட படங்கள். | படங்களைப் பார்த்துத் தம் கருத்துக்களைக் கூறுவார்.<br>படம் பார்த்துப் பேசுவார். | செய்துகாட்டல்<br>முன்வைத்தல்<br>கலந்துரையாடல் | 03மணித்தியாலங்கள் |
| | 1.7. பெயர்ச்சொற்கள், பிரதிப் பெயர்கள், வேற்றுமை உருபுகள் அடைமொழிகள் எனபனவற்றைப் பயன்படுத்தி உரையாடுவார். | பயன்பாட்டிலுள்ள வேற்றுமை உருபுகளான ஐ, ஆல், ஓடு, கொண்டு, கு, இல், இருந்து, உடைய, இடம் ஆகிய உருபுகளோடு தேவையான பேச்சுமொழிக்குரிய உருபுகளும் உருபு ஏற்காது வரும் இடங்கள் - என், உரிமை, ஓவியம் வரைந்தேன். பிரதிப்பெயர்கள் - அவன் அது போன்றறை,அடைமொழிகள். | பெயர்ச்சொற்கள், பிரதிப் பெயர்கள், வேற்றுமை உருபுகள் அடைமொழிகளைப் பொருத்தமாகப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்து உரையாடுவார். | செய்துகாட்டல்,<br>முன்வைத்தல் | 04மணித்தியாலங்கள் |
| | 1.8. நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார். | வழிகாட்டும்படி கேட்டல்<br>படிவம் நிரப்புவற்கு உதவி கேட்டல்.<br>தபாற்கந்தோரில் முத்திரை வாங்குதல் | நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உரையாடுவார். | செய்து காட்டல்.<br>போலச் செய்தல்<br>வகிபாகமேற்றல்<br>இருமொழிப் பயன்பாடு | 03மணித்தியாலங்கள் |
| | 1.9. சரியான உச்சரிப்புடன் இலக்கங்களைக் குறிப்பிடுவார் | எண்கள் - எழுத்திலும் இலக்கத்திலும் முதலாம், முதலாவது,ஐந்தாம், ஐந்தாவது, ஒருவர், இருவர் போன்றவையும் ஆண்டுகள் - 2010 2019. போன்றவையும் 1000 இலிருந்து 10000 வரை | இலக்கங்களை இனங்கண்டு தெளிவாக உச்சரிப்பார். | செய்து காட்டல்.<br>இருமொழிப் பயன்பாடு<br>வினவுதல் முறை | 03மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 1.10. உரையாடலின்போது கால வேறுபாட்டுச் சொற்களைப் பயன்படுத்துவார். | வார நாட்கள், மாதங்கள், நேரம் (அதிகாலை, காலை,மதியம், மத்தியானம், பகல், பின்னேரம், மாலை, இரவு, நடு நிசி. நேற்று, இன்று, நாளை, நாளை மறுதினம், நேற்று முன்தினம், கோடை, மாரி, பனி, குளிர், மழை, வெயில், சீதோஷ்ண நிலை<br><br>(மாதங்கள் தமிழிலும், ஆங்கிலத்திலும் பயன்படுத்தும் முறை) | தொடர்பாடல்களின் போது இவற்றைப் பயன்படுத்தி உரையாடுவார். | செய்து காட்டல்.<br>வினவுதல் முறை<br>இருமொழிப்பயன்பாடு | 03மணித்தியாலங்கள் |
| | 1.11. இலத்திரனியல் ஊடகங்களின் செய்திகளைச் செவிமடுத்துக் கூறுவார். | தொலைக்காட்சி, வானொலிச் செய்திகள் | ஊடகங்களில் பெற்ற தகவல்களைக் கூறுவார். | செய்து காட்டல்.<br>வகிபாகமேற்றல்<br>போலச்செய்தல் | 04மணித்தியாலங்கள் |
| | 1.12 பல்வேறு உரையாடல்கள், பேச்சுக்கள் கலந்துரையாடல்கள், சொற்பொழிவுகள் என்பவற்றைச் செவிமடுத்து உரிய துலங்கல்களைக் காட்டுவார். | பதிவு செய்யப்பட்ட பல்வேறு பேச்சாளர்களின் உரைகள் உரையாடல்கள் சொற்பொழிவுகள் போன்றவை. | பேச்சுக்களையும் உரையாடல்களையும் சொற்பொழிவுகளையும் செவிமடுத்துத் துலங்குவார்.<br><br>கேட்கப்படும் வினாக்களை விளங்கி அவற்றுக்குத் துலங்குவார். | குழுச்செயற்பாடு<br>வகிபாகமேற்றல்<br>போலச்செய்தல்,<br>இருமொழிப் பயன்பாடு,<br>விளக்கல் முறை | 04மணித்தியாலங்கள் |
| | 1.13 பாடல்களை இசையுடன் பாடுவார் | நாட்டார் பாடல்கள், சிறுவர் பாடல்கள், நற்சிந்தனைப் பாடல்கள் | பாடல்களைச் சரியான உச்சரிப்புடனும், இசையுடனும் பாடுவார். | செய்து காட்டல்.<br>குழுச்செயற்பாடு<br>மனனஞ் செய்தல | 03மணித்தியாலங்கள் |
| | 1.14 குறிப்பிட்ட விடயம் தொடர்பாகத் தெளிவாகப் பேசுவார். | எனது தொழில், சுற்றுலா, சந்தை, எனது பொழுதுபோக்கு, நான் விரும்பும் பெரியார், தைப்பொங்கல், எனது அலுவலகத்தின் நாளாந்தச் செயற்பாடுகள். | இலகுவான தலைப்பின் கீழ் பேசுவார்.<br>குறிப்பிட்ட விடயம் பற்றித் தயாரித்து மனனம் செய்து பேசுவார் | செய்து காட்டல்<br>போலச் செய்தல்<br>குழுச்செயற்பாடு | 04மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 1.15. குறிப்பிட்ட சம்பவம் பற்றி விபரித்துக் கூறுவார். | வீதி விபத்து, எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவம், எனது நண்பனின் திருமண வைபவம், அலுவலகத்தில் ஏற்பட்ட சம்பவம் | நடந்த சம்பவம் தொடர்பாகத் முன்னாயத்தத்துடன் பேசுவார். | செய்து காட்டல்.<br>குழுச்செயற்பாடு | 04மணித்தியாலங்கள் |
| | 1.16 சொற்கள், வாக்கியங்கள் உரைப்பகுதி என்பவற்றை தமிழிலிருந்து சிங்களத்திற்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழிபெயர்த்துக் கூறுவார் | சிங்களம் - தமிழ்,தமிழ் - சிங்களச் சொற்கள், வாக்கியங்கள், உரைப்பகுதிகள் சுற்றறிக்கைகள் உத்தியோக பூர்வ அறிவித்தல்கள் உத்தியோக பூர்வக் கடிதங்கள், அழைப்பிதழ்கள், பெயர்ப்பலகைகள் | தமிழிலிருந்து சிங்களத்திற்கு மொழி பெயர்த்துக் கூறுவார்<br>சிங்களத்திலிருந்து தமிழிற்கு மொழி பெயர்த்துக் கூறுவார். | செய்து காட்டல்.<br>குழுச்செயற்பாடு<br>முன்வைத்தல்<br>வகிபாகமேற்றல் | 02மணித்தியாலங்கள் |
| | 1.17. நிகழ்வுகளின்போது பண்புடன் உரையாற்றுவார். | பல்வேறு விளிப்புச் சொற்கள், விழாக்கள், நிகழ்வுகளில் வரவேற்புரை, நன்றியுரை<br>மொழிவளம்<br>பழமொழிகள், இணைமொழிகள், இரட்டைக்கிளவி, மரபுத்தொடர், அடுக்குத் தொடர் போன்றவற்றைப் பயன்படுத்துதல். | நிகழ்வொன்றில் வரவேற்புரை நிகழ்த்துவார்.<br>நிகழ்வொன்றில் நன்றியுரை நிகழ்த்துவார்.<br>குறிப்பிட்ட விடயம் பற்றித் தயாரித்து மனனம் செய்து பேசுவார். | செய்து காட்டல்.<br>கலந்துரையாடல்<br>முன்வைத்தல்<br>வகிபாகமேற்றல் | 04மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| **2.0** | **வாசிப்பு**<br>2.1 சொற்கள், சொற்றொடர்களைத் தெளிவான உச்சரிப்புடன் வாசிப்பார். | ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட சொற்கள் சொற்றொடர்கள் | சொற்கள், சொற்றொடர்களை தெளிவாக உச்சரித்து வாசிப்பார். | செய்து காட்டல்.<br>வகிபாகமேற்றல் முறை<br>அவதானித்தல் | 06மணித்தியாலங்கள் |
| | 2.2. உயிர்க்குறிகளைக் கவனத்திற்கொண்டு வாசிப்பார். | **தி, தீ கெ, கே, லு, லூ, மு, மூ, கி, கீ, கொ, கோ, கௌ** | சொற்கள், சொற்றொடர்களை தெளிவாக உச்சரித்து வாசிப்பார். | செய்து காட்டல்.<br>வகிபாகமேற்றல் முறை<br>அவதானித்தல் | 04மணித்தியாலங்கள் |
| | 2.3. சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களைத் தெளிவான உச்சரிப்புடன் உரத்து வாசிப்பார். | குடும்பத்தினர், உறவினர், தொழில் சார்ந்த அறிவியற் சொற்கள், சூழலும் சுற்றுப்புறமும் சார்ந்த சிறிய பந்திகள், சிறு கதைகள் கடிதங்கள், விளம்பரங்கள், துண்டுப் பிரசுரங்கள். உரையாடல்கள், சுற்றறிக்கைகள், வாழ்க்கைச் சரிதைகள், விளம்பரங்கள், பத்திரிகைச் செய்திகள், வானொலிச் செய்திகள், அறிவித்தல்கள், உத்தியோக பூர்வக் கடிதங்கள் | சொற்கள், சொற்றொடர்களை தெளிவாக உச்சரித்து உரத்து வாசிப்பார்.<br>வாக்கியங்களை விளங்கி உரத்து வாசிப்பார்.<br>உரைநடைப் பகுதிகளை விளங்கி உரத்து வாசிப்பார். | செய்து காட்டல்.<br>வகிபாகமேற்றல் | 06மணித்தியாலங்கள் |
| | 2.4. இணைமொழிகள், இரட்டைக்கிளவிகள், மரபுத்தொடர்கள், பழமொழிகள் என்பவற்றை உரிய முறையில் வாசிப்பார். | இணைமொழிகள், இரட்டைக்கிளவிகள், மரபுத்தொடர்கள், பழமொழிகள் | சரியான உச்சரிப்புடன் வாசிப்பார். | செய்து காட்டல்.<br>குழுச்செயற்பாடு<br>விளக்குதல் | 12மணித்தியாலங்கள் |
| | 2.5. குறிப்பிட்ட பகுதியை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை கூறுவார். | உரைப்பகுதிகள், உரையாடல்கள், கதை, கடிதங்கள், பத்திரிகைச் செய்திகள், பாடல்கள், வானொலிச் செய்திகள் | குறிப்பிட்ட பகுதியை மௌனமாக வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை கூறுவார். | தனிச் செயற்பாடு,<br>குழச்செயற்பாடு<br>வினவுதல் | 12மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| **3.0** | **எழுத்து**<br><br>3.1 எழுத்துக்கள்**,** சொற்கள், சொற்றொடர்கள் என்பவற்றை உறுப்பமைய எழுதுவார். | உயிர் எழுத்து மெய் எழுத்து உயிர் மெய் எழுத்து ஆய்த எழுத்து என்பவற்றுடன் கிரந்த எழுத்துக்கள் **ஸஇ ஷ, ஹஇ ஜஇ ஸ்ரீ** என்பனவும் பார்த்து எழுதுதல், சொல்வதெழுதல்<br>பாடப் பகுதியில் உள்ள சொற்கள், ஒருமை, பன்மைச் சொற்கள், ஆண்பால், பெண்பால் சொற்கள் | எழுத்துக்களை உறுப்பமைய எழுதுவார்.<br>ஒலிப்பிற்கேற்ப எழுத்துக்களைச் சரியாக இனங்கண்டு எழுதுவார்.<br>சொற்களை உறுப்பமைய எழுதுவார்.<br>சொற்களை சரியாக எழுத்துக்கூட்டி எழுதுவார்.<br>மொழி வளத்தில் கற்றவற்றை எழுதிக் காட்டுவார். | ஒத்த உருவமைப்பு முறை<br><br>தனிச்செயற்பாடு<br><br>செய்து காட்டல் முறை | 06மணித்தியாலங்கள் |
| | 3.2 வாக்கியங்களை உறுப்பமைய எழுதுவார். | பார்த்து எழுதுதல், சொல்வதெழுதல். | வாக்கியங்களை உறுப்பமைய எழுதுவார்.<br>வாசிப்பதை அவதானித்து, கேட்டு வாக்கியங்களைச் சரியாக எழுதிக் காட்டுவார். | செய்து காட்டல்.<br><br>இருமொழிப்பயன்பாடு | 03மணித்தியாலங்கள் |
| | 3.3 எழுவாய் பயனிலை இயைபுற வாக்கியங்களை எழுதுவார் | எழுவாய் - பெயர்ப்பயனிலை<br>எழுவாய் - வினைப் பயனிலை<br>எழுவாய் - வினாப் பயனிலை<br>செயப்படுபொருள் பெற்று வரும் வாக்கியங்கள், அடைமொழிகளோடு வரும் வாக்கியங்கள். தனிவாக்கியங்களை ஒரு வாக்கியமாக்குதல், இணைப்பிடைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியம் அமைத்தல். (எனவே,அதனால், ஆகவே போன்றவை) இணைமொழி, இரட்டைக்கிளவி, மரபுத்தொடர், அடுக்குத்தொடர், பழமொழிகள் | எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் அடைமொழி கொண்ட வாக்கியங்களை எழுதுவார்.<br>தனி வாக்கியங்களை ஒரு வாக்கியமாக எழுதிக்காட்டுவார்.<br>பொருத்தமானவாறு இணைமொழி, இரட்டைக்கிளவி, மரபுத்தொடர்கள் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைப்பார். | செய்து காட்டல்.<br><br>தனிச்செயற்பாடு<br><br>இருமொழிப்பயன்பாடு | 06மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 3.4 பந்திகளை எழுதுவார். | சிறு உரைப்பகுதிகள் | எழுத்துப் பொறிமுறைக்கமைய எழுதுவார். | செய்து காட்டல்.<br>தனிச் செயற்பாடு<br>இருமொழிப்பயன்பாடு | 04மணித்தியாலங்கள் |
| | 3.5. சிறு கட்டுரைகளை எழுதுவார். | எனது அலுவலகம்<br>நான் படித்த பாடசாலை<br>எனது நாடு, நான் விரும்பும் விளையாட்டு,<br>எனது பொழுதுபோக்கு | குறிப்பிட்ட விடயம் பற்றி கட்டுரையொன்றை எழுதுவார் | செய்து காட்டல்.<br>இரு மொழிப்பயன்பாடு | 04மணித்தியாலங்கள் |
| | 3.6. தொடர்பாடலுக்காகக் கடிதம் எழுதுவார் | தந்தை மகனுக்குஎழுதுதல்<br>லீவு கோரல்<br>குறிப்பிட்ட விடயத்துக்கான அனுமதி கோரல்<br>கடித அமைப்புப் பற்றிய விளக்கம். | உறவு முறை, அலுவலகக் கடிதங்களை எழுதுவார். | செய்து காட்டல்.<br>இரு மொழிப்பயன்பாடு<br>மாதிரிகளைக் காட்சிப்படுத்தல். | 04மணித்தியாலங்கள் |
| | 3.7.அன்றாடத் தேவைகளுகக்காகப் படிவங்களை நிரப்புவார். | விண்ணப்பப் படிவம்<br>சுயவிபரப் படிவம்<br>தொழில் சார்ந்த படிவங்கள்<br>நிகழ்ச்சிநிரல் தயாரித்தல் போன்றன. | சுயதேவை கருதிப் படிவங்களை நிரப்புவார். | செய்து காட்டல்.<br>தனிச் செயற்பாடு,<br>குழுச்செயற்பாடு | 03மணித்தியாலங்கள் |
| | 3.8. உரையாடல்களை எழுதுவார். | இரு நபர்களுக்கிடையிலான உரையாடல்.<br>(வைத்தியர் -நோயாளி)<br>(அதிபர் - ஆசிரியர்)<br>(அதிகாரி - அலுவலர்)<br>(வியாபாரி - நுகர்வோர்)<br>நேரக்கணிப்பாளர் - பயணி | கருத்துத் தெளிவுடனும் உரையாடல் பாங்குடனும் வழுவின்றி எழுதுவார்.<br>பேச்சுத் தமிழ் மொழியையும் பயன்படுத்தி உரையாடல்களை எழுதுவார் | செய்து காட்டல்.<br>தனிச் செயற்பாடு,<br>குழுச்செயற்பாடு | 05மணித்தியாலங்கள் |
| | 3.9. குறிப்பிட்ட பகுதியை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார். | உரைப்பகுதிகள், உரையாடல்கள், கதை, கடிதங்கள், பத்திரிகைச் செய்திகள், பாடல்கள், வானொலிச் செய்திகள் | குறிப்பிட்ட பகுதியை மௌனமாக வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடை எழுதுவார். | செய்து காட்டல்.<br>தனிச் செயற்பாடு,<br>குழுச்செயற்பாடு | 04மணித்தியாலங்கள் |
| | 3.10.விதிகளுக்கமையச் சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார. | பூ, மாலை புகை, வண்டி கத்தரி, காய் வாழை, பழம் கல் தூண் பொன்தாலி மண், குடம் மரம், வேர் கடற்கரை | சொற்களைச் சேர்த்தும் பிரித்தும் எழுதுவார. | செய்து காட்டல்.<br>இரு மொழிப்பயன்பாடு | 03மணித்தியாலங்கள் |
| | 3.11.தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்கி எழுதுவார். | தனி வாக்கியங்கள். | தனி வாக்கியங்களைக் கூட்டு வாக்கியமாக்கி எழுதுவார். | | 03மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| | 3.12.கூட்டு வாக்கியங்களைத் தனி வாக்கியமாக்கி எழுதுவார். | கூட்டு வாக்கியங்கள், தனி வாக்கியங்கள் | கூட்டு வாக்கியங்களைத் தனி வாக்கியமாக்கி எழுதுவார். | | 03மணித்தியாலங்கள் |
| | 3.13.நாளாந்த தேவைக்காக ஆக்கங்களை எழுதுவார். | அறிவித்தல் அறிவுறுத்தல்கள் விளம்பரங்கள் துண்டுப்பிரசுரங்கள் அறிக்கைகள் பாடல்கள் கவிதைகள் சிறுகதைகள் அழைப்பிதழ்கள். | சிறு ஆக்கங்களை எழுதி முன்வைப்பார். | செய்து காட்டல்.<br>இரு மொழிப்பயன்பாடு | 12மணித்தியாலங்கள் |

| அலகு | குறிக்கோள் | உள்ளடக்கம் | கற்றல் பேறு | கற்றல்,கற்பித்தல் முறை | காலம் |
|---|---|---|---|---|---|
| **4.0** | **இலக்கணம்**<br>4.1 இலக்கண வழுவின்றி வாக்கியங்களை அமைப்பார். | இரு திணை, ஐம்பால், மூவிடம், ஒருமை-பன்மை, முக்காலம் பற்றிய உதாரணங்களுடனான விளக்கங்கள்.<br>வினைமுற்று<br>(வந்தான்,போனான்)<br>வினையெச்சம்<br>(அவன் வந்து போனான்.)<br>பெயரெச்சம்<br>(நேற்று இங்கு வந்த பையன் சென்று விட்டான்.)<br>ஏவல் வினை<br>(வா, போ, நில்)<br>(நீ அங்கே போ.) (நீ இங்கே வா.)<br>(நீ இங்கே நில்.) | திணை, பால், எண், இடம், கால வழுவின்றி வாக்கியங்களை எழுதிக் காட்டுவார்.<br><br>ஏவல் வினைகளைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதிக் காட்டுவார். | செய்து காட்டல்.<br><br>இரு மொழிப்பயன்பாடு<br><br>தனிச்செயற்பாடு<br><br>வினவுதல் முறை | 13மணித்தியாலங்கள் |
| | 4.2. வேற்றுமை உருபுகளை வாக்கியங்களில் பொருத்தமாகப் பயன்படுத்திக் காட்டுவார். | வேற்றுமை 1 – 8<br>வேற்றுமை உருபுகள்.<br>(ஐ,ஆல், ஒடு, கொண்டு, கு, இல், இருந்து, அது, உடைய, இடம் ஆகிய பயன்பாட்டில் உள்ள உருபுகளோடு)<br>பேச்சு மொழிப்பயன்பாட்டிற்கான உருபுகள்.<br>தொக்கி நிற்கும் உருபுகள் என்பவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்கள் அமைத்தல்.<br>உ.ம்: பாட்டுப் பாடினான்.<br>கடிதம் எழுதினான்.<br>என் மகன். | வேற்றுமை உருபேற்ற சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதிக் காட்டுவார். | செய்து காட்டல்.<br><br>இரு மொழிப்பயன்பாடு | 13மணித்தியாலங்கள் |
| | 4.3. நிறுத்தக் குறிகளைப் பொருத்தமான வகையில் வாக்கியங்களில் பயன்படுத்துவார் | நிறுத்தக்குறிகள்<br>முற்றுப்புள்ளி (.)<br>காற்புள்ளி (,)<br>வினாக்குறி ( )<br>மேற்கோட் குறி ("") ('')<br>விளிப்புக்குறி (! ) | வாக்கியங்களில் சரியான முறையில் நிறுத்தக் குறியீடுகளைப் பயன்படுத்தி எழுதுவார். | விளக்கம்<br>செய்து காட்டல்<br>உதாரணங்களைக் காட்சிப்படுத்தல் | 04மணித்தியாலங்கள் |